(இ) ஆமெனில், 1968 ஏப்ரல், மே, ஜூன் திங்களில் எத்தனை குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஒரே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: பதிவு செய்யப்பட்ட வழக்கின் முடிவு என்ன என்று கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தக் குற்றவாளிகளுக்கு ரூ. 50 நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டது.

Allotment of paddy to Madurai.

*111 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether 40 thousand bags of paddy were allotted to Madurai from Thanjavur; and

(*b*) whether rice mill owners complained that in the majority of the bags, paddy has germinated to a height of 2½ inches?

மதுரைக்கு ஒதுக்கப்பட்ட நெல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சையிலிருந்து மதுரைக்கு 40 ஆயிரம் மூட்டை நெல் ஒதுக்கப்பட்டதா?

(இ) அதில் பெரும்பாலான மூட்டைகளில் 2½ அங்குல நெற் பயிர் முளைத்து விட்டது என அரிசி ஆலை சொந்தக்காரர்கள் புகார் செய்தார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) தஞ்சையிலிருந்து மதுரை மாவட்டத்திற்கு 40,000 டன் அரிசிக்குள்ள நெல் சென்ற குறுவை அறுவடையிலிருந்து ஒதுக்கப்பட்டது. அதில் சுமார் 22,000 டன் 1—10—1967-லிருந்து 31—12—1967 முடிய மதுரை மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ) அதில் பெரும்பாலான மூட்டைகளில் 2½ அங்குல நெற் பயிர் முளைத்து விட்டது என்று அரிசி ஆலை சொந்தக்காரர்கள் புகார் செய்யவில்லை. ஏ.டி.டி. 27 நெல் ஈரமாக இருப்பதாகவும், சில மூட்டைகளில் நெல் முளைத்திருப்பதாகவும் பதர் அதிகமாக இருப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, வளர்ந்த பயிரின் அளவு 2½ அங்குலம் அல்லது குறைவாக 2¼ அங்குலமாகக்கூட இருந்திருக்கலாம். அப்படி எவ்வளவு நெல் கெட்டுவிட்டது? அதனால் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: குறுவைப் பயிர் மழை காலத்தில் அறுவடையானது. அவசர அவசரமாக வெளி மாவட்

14th March 1969]

டங்களுக்கு வழக்கமாக அனுப்புவதைவிட இரண்டு மடங்கு துரிதமாக அனுப்பவேண்டிய நிலையில் இருந்தபோது சில மூட்டைகளில் பயிர் முளைத்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. முளைத்தது 2½ அங்குலமா 2¼ அங்குலமா என்று தகவல் தரப்படவில்லை.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, நவீன நெல் உலர்த்தி இயந்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்த மில்லுக்கு நெல்லைக் கொண்டு செல்லவில்லையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது நடந்தது 1967-ல். நவீன மில் நிறுவப்படாத நிலையில் ஏற்பட்ட விளைவு இது. இந்த ஆண்டு நல்ல வெயில் காய்ந்ததால் உலர்த்தும் இயந்திரத்திற்கு வேலையில்லாமல் போய்விட்டது.

Andhra rice.

* 112 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the quantity of rice imported into Tamil Nadu from Andhra Pradesh from April 1967 to the end of June 1968?

ஆந்திர அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆந்திராவிலிருந்து 1967 ஏப்ரல் முதல் 1968 ஜூன் முடிய தமிழகத்திற்கு வந்த அரிசி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பதினைந்தாயிரத்து நூற்றைம்பது டன்கள் பச்சரிசி.

Government High School at K. Pudupatti village.

* 113 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether a Government High School with 50 students has been started at K. Pudupatti village in Uthamapalayam taluk of Madurai district, even though a private High School is functioning there, with 350 students; and

(b) if so, the reason therefor?

அரசினர் உயர்நிலைப்பள்ளி, க. புதுப்பட்டி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட உத்தமபாளையம் தாலுகா க. புதுப்பட்டி என்னும் ஊரில் தனியார் உயர்நிலைப்பள்ளி 350 மாணவர்களுடன் இயங்கிவரும் பொழுது அதே ஊரில் 50 மாணவர்களுடன் சர்க்கார் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?